பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

15 08 2024 **THURSDAY** 6 30 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க நாட்டு மக்கள் அனைவரும் உறுதியேற்றுக் கொள்ள வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

2. பிரதமரின் சுதந்திர தின உரை வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான மத்திய அரசின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. முன்னாள் படை வீரர்களின் நலனுக்கென 'காக்கும் கரங்கள்' என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

4. தூத்துக்குடி துறைமுகத்தில் பசுமை ஹைட்ரஜன் ஆலைக்கான பணிகள் நவம்பர் மாதம் தொடங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. **Valencia** ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**>>>>><<<<<**

வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க நாட்டு மக்கள் அனைவரும் உறுதியேற்றுக் கொள்ள வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

நாட்டின் 78வது சுதந்திர தினத்தை ஒட்டி இன்று புதுதில்லியில், வரலாற்றுச் சிறப்புமிக்க செங்கோட்டையில் தேசியக்கொடியை ஏற்றிவைத்து அவர் உரையாற்றினார்.

செமிகண்டக்டர் உற்பத்தியில் உலகின் முன்னணி நாடாக இந்தியா திகழ வேண்டும் என்ற நோக்கில் தமது அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

உலகின் திறன் முனையமாக இந்தியாவை உருவாக்க இளையோருக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் தமது அரசு உறுதியுடன் உள்ளதாக கூறிய பிரதமர், இதன் அடிப்படையில் பசுமை சார்ந்த வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும் என்று தாம் விடுத்த அழைப்பிற்கு பொதுமக்கள் அதிக அளவில் ஆதரவு அளித்திருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும் பிரதமர் கூறினார்.

வங்கித் துறையை வலுப்படுத்த பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார். மகளிர் மேம்பாட்டிற்காக மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களையும் பிரதமர் பட்டியலிட்டார்.

மதச்சார்பற்ற பொது சிவில் சட்டம் கொண்டுவரப்பட வேண்டியது அவசியமாகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

மக்களவைக்கும் மாநிலங்களின் சட்டப்பேரவைக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

நாட்டிற்காக உயிர்த்தியாகம் செய்த ஒவ்வொருவருக்கும் நாம் கடன்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அடுத்த ஐந்தாண்டுகளில் மருத்துவப் படிப்புகளுக்காக கூடுதலாக 75 ஆயிரம் இடங்கள் உருவாக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இதனைத் தொடர்ந்து பிரதமர், பார்வையாளர்கள் பகுதிக்குச் சென்று அவர்களுடன் கலந்துரையாடினார்.

சுதந்திர தின கொண்டாட்டங்களில் மக்களின் பங்களிப்பு அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கில், மத்திய அரசு அழைப்பு விடுத்த ஆறாயிரம் சிறப்பு அழைப்பாளர்கள் இவ்விழாவில் பங்கற்றனர்.

தமிழகத்தைச் சேர்ந்த 21 பேர் சிறப்பு அழைப்பாளர்களாக இதில் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் பங்கேற்றது தமது வாழ்நாளில் மறக்க இயலாதது என்று சென்னையைச் சேர்ந்த அங்கன்வாடி பணியாளர் ஒருவர் தெரிவித்தார்.

**>>>>><<<<<**

பிரதமரின் சுதந்திர தின உரை, வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான மத்திய அரசின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், வலிமையான இந்தியாவை உருவாக்க நாட்டு மக்கள் அனைவரும் உறுதியேற்றுக் கொள்ள வேண்டும் என்றார்.

**>>>>><<<<<**

தமிழகத்திலும் சுதந்திர தினம் உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், சென்னையில் தேசியக்கொடியை ஏற்றிவைத்து உரையாற்றினார். முன்னாள் படைவீரர்கள் தொழில் தொடங்க, வங்கிகள் மூலம் 1 கோடி ரூபாய் கடன் வழங்குவதற்கென 'முதல்வரின் காக்கும் கரங்கள்' என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று அவர் அறிவித்தார். விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியம் 20 ஆயிரம் ரூபாயிலிருந்து 21 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படுவதாக அவர் கூறினார்.

இதேபோல், விடுதலைப் போராட்ட தியாகிகளின் குடும்பத்திற்கு வழங்கப்படும் ஓய்வூதியம் 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 11 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தப்படும் என்றும் திரு. மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

மாவட்ட தலைநகரங்களில் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்ச்சியில் ஆட்சியர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டனர். மாநிலம் முழுவதும் கிராமசபைக் கூட்டங்களும் இன்று நடைபெற்றன.

**>>>>><<<<<**

தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் பசுமை ஹைட்ரஜன் ஆலை அமைப்பதற்கான பணிகள் நவம்பர் மாதம் தொடங்கப்படும் என்று அதன் தலைவர் திரு. சுஷாந்த்குமார் ரோஹித் கூறியுள்ளார்.

இந்த துறைமுக வளாகத்தில் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இப்பணிகள் அடுத்த ஆண்டு இறுதிக்குள் நிறைவடையும் என்றும் திரு. சுஷாந்த்குமார் ரோஹித் கூறினார்.

**>>>>><<<<<**

மாவட்டச் செய்திகள்

மதுரை மாவட்டம், வெள்ளரிப்பட்டி கிராமத்தில் நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் ஆட்சியர் திருமதி. சங்கீதா இன்று பங்கேற்றார்.

**>>>>><<<<<**

பெரம்பலூர் மாவட்டத்தில் 3 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி. கிரேஸ் பச்சாவ் இன்று பயனாளிகளுக்கு வழங்கினார்.

**>>>>><<<<<**

நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் அருகேயுள்ள சொரிமுத்து அய்யனார் கோவில் குளத்தில் குளிக்கச் சென்ற இரண்டு மாணவிகள் உட்பட 3 பேர் உயிரிழந்தனர்.

**>>>>><<<<<**

விளையாட்டுச் செய்திகள்

**Valencia** ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஸ்பெயினில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 6-1, 3-6, 6-2 என்ற செட்கணக்கில் ஸ்பெயினின் **Maria Martinez Vaquero-**வை வென்றார்.

**>>>>><<<<<**

**CARY** சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய் சுந்தர் பிரசாந்த் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>>>End<<<<<**